SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

SOND face book - Social Organizations Networking for Development - (SOND)

# மாதாந்த அறிக்கை

சித்திரை, 2014.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu
sondak@eureka.lk

No. 19, Saravana Road
Kallady Batticaloa.
sondbati@eureka.lk

60'' Arasady Road
Jaffna
sondjf@eureka.lk



# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## முன்மாதிரி பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் 11ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றுத. தற்போது இப் பண்ணையில் தென்னை, வாழை மரக்கறி பயிரினங்கள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.






## பாலர் பாடசாலைஆசிரியருக்கானபயிற்சி

சிவாச்சரிட்டியின் அனுசரனையுடன் 2014.04.20,21,22ம் திகதிகளில் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆக்கச் செயற்பாடு தொடர்பான பயிற்சி கொழும்பில் நடைபெற்றது. இதில் எமது அமைப்பின் கீழ் செயற்படும் அம்பாறை மாவட்டத்தினைச் சேர்ந்த பாலர் பாடசாலை ஆசிரியர்கள் 10பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.




# நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு கடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்டதமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண், 29 பெண் உள்ளடங்கலாக 50 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

இம் மாதம் சிறுவர்களினால் நான்கு நடமாடும் நூலக சேவை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 191 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

. சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரன்வோட், கிரிக்கெட் வெட், ஸ்பிங் ஆகிய மூன்று வகையான விளையாட்டுப்பொருள்ட்கள் 07 தடவைகள் வழங்கப்பட்டது.





## வளநிலையப் பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், அரசாங்க ஊழியர்கள்,பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் 10தலைப்பில் 164 புத்தகங்களைப் பயன்படுத்தியுள்ளார்கள்.



# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## Video Filming பயிற்சி

03.04.2014 வியாழக்கிழமை இளைஞர்களுக்கான Video Filming தொடர்பான பயிற்சி நிறுவனப்பணிப்பாளர் திரு.ச.செந்துராசாஅவர்களால் நடாத்தப்பட்டது.

## முன்மாதிரிப் பண்ணை திறப்பு விழா

10.04.2014 வியாழக்கிழமை அன்று நீர்வேலியில் அமைக்கப்பட்ட முன்மாதிரிப் பண்ணை திறப்பு விழா திரு.ச.செந்துராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமாகாண விவசாய அமைச்சர் திரு.பொ.ஐங்கரநேசன், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயபீட மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள்,விவசாய துறை நிபுணர்கள் சமூகமளித்திருந்தார்கள். அவர்களுடன் யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக வாழைச் செய்கைக்கு சொண்ட் நிறுவன அனுசரனையுடன் சேதன சான்றிதழ் வழங்கும் ஸ்ரீசெட் நிறுவனமும் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பண்ணை ஆரம்ப வைபவத்தை தொடர்ந்து ஏற்கனவே ஆய்வுக்குட்படுத்தப்பட்ட வாழை செய்கையாளர்களிடம் வாழை செய்கை முறை பற்றிய பரிசோதனைகளை மேற்கொண்டு முதல் தடைவையாக யாழ்ப்பாணத்தில் உள்ள வாழை செய்கையாளர் சிலருக்கு சேதன சான்றிதழ் வழங்குவதற்குரிய நடவடிக்கை பற்றி ஆலோசிக்கப்பட்டுள்ளது.









## உற்பத்தியாளரிற்கான கலந்துரையாடல்

எமது பகுதியில் பல்வகை உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கான சிறந்த சந்தை வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் எமது SOND அலுலகத்தில் 11.04.2014 அன்று நடாத்தப்பட்டது.





# மட்டக்களப்பு மாவட்டத்தின் செற்பாட்டு விபரம்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்**

டயக்கோனியா நிறுவனம் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு,ஆரையம்பதி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் புதிகாக பட்டிப்பளை பிரதேச செயலாளரின் அனுமதியுடன் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் இவ்வாண்டில் திட்டமிட்டு வருகின்றோம்.

**காலநிலை மாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental protection)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, ஆரயம்பதி போன்ற இடங்களின் வீதி நடுப்பகுதியில் நடப்பட்ட மரங்களில் வளர்ச்சியடைந்து வருகின்ற வேளையில் அனைத்து மரங்களிடையே உள்ள களைகள் அகற்றப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்த 6 கூடுகள் சரி செய்யப்பட்டு முறையாகவும் தொடர்ச்சியாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

.



## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவு‘ட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.